ராணி
காமிக்ஸ்
அதிரடிப் பெண்
ரூ 2

ராணி காமிக்ஸ்–170
(மாதம் இருமுறை இதழ்)

ஜூலை 16–31
1991

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்

மாயாவி காட்டு வழியே குதிரையில் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு குரல் கேட்டது.
?
உம்... குதி...
முடியாது!
இப்பொழுது நான்தான் கேப்டன். நீதான் தண்ணீருக்குள் குதிக்க வேண்டும்.
ஆமாம், இப்பொழுதும் இதுபோல கடல் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்களா, ரெக்ஸ்?
எனக்குத் தெரிய வில்லை, டாம்டாம். மாயாவி மாமாவிடம் கேட்போமா?

மாயாவியின் குகைக்கு வந்தார்கள்.
இப்பொழுதும் கடல் கொள்ளைக் காரர்கள் இருக் கிறார்களா?
அந்தக் காலத்தில் இருந்தார்கள்.
இப்பொழுது காலம் மாறிவிட்டது. ஆனாலும், கொள்ளைக்காரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.
அதாவது, கடல் கொள்ளைக் காரர்கள்?
அந்தக் காலத்தில் நடுக்கடலில் கப்பல்களை வழிமறித்து, வழிப்பறி செய்வார்கள்.
இப்பொழுது...

அதேநேரம்— பாரசீக வளைகுடாவில் இருந்து எண்ணெய் ஏற்றிக்கொண்டு ஒரு மிகப்பெரிய எண்ணெய்க் கப்பல், கிளம்பியது. உலகில் உள்ள பெரிய கப்பல்களில் அதுவும் ஒன்று.
கப்பலில் மாலுமிகள் ஓய்வாகப் பொழுதைக் கழித்தார்கள்.
இந்தக் கப்பலில் உள்ள எண்ணெய் எவ்வளவு விலையிருக்கும்?
இன்றைய விலையில் பத்து கோடி ரூபாய்!
நீ வாங்கப் போகிறாயா!

திடீரென்று இரண்டு கொள்ளையர்கள் தண்ணீருக்குள் இருந்து வெளியே வந்தார்கள்.
அதோ கப்பல் வந்துவிட்டது!
நமது வேலையைத் தொடங்க வேண்டியதுதான்!
கொள்ளைக்காரர்கள் எண்ணெய்க் கப்பலுக்கு வந்தார்கள்.
அசையாதீர்கள்! அப்படியே நில்லுங்கள்!!
ஒருவன் மாலுமி அறைக்குச் சென்றான்.
இவர்கள் எங்கேயிருந்து வந்தார்கள்?
டுமீல்...
டுமீல்...
டுமீல்...
கொள்ளையடிக்க நம்மிடம் என்ன இருக்கிறது?
அடுத்தடுத்து கொள்ளையர்கள் வந்து கொண்டேயிருந்தார்கள்.

யாரும் பேசக்கூடாதாம்! அசையாமல் நிற்க வேண்டுமாம்!
டுமீல்...
டுமீல்...
டுமீல்...
சுடாதே! இது எண்ணெய்க் கப்பல்.
நாம் கரையில் இருந்து ஆயிரம் மைல் தூரத்தில் இருக்கிறோம். இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்?
பேசாதே! நட!!
எங்கே?

பாதாள அறைக்குள் போட்டு அடைத்தார்கள்!
இங்கே திருடுவதற்கு எதுவும் இல்லை. இது எண்ணெய்க் கப்பல்.
கப்பலைத் திருட முடியாது. ஏனென்றால், இந்தக் கப்பல் 'எம்பயர் ஸ்டேட்' மாளிகையை விடப் பெரியது!
கொள்ளையர் பெரிய பெரிய குழாய்களைக் கொண்டு வந்தார்கள்.
குழாய் எதற்கு?
பேசாதே! நம்மையும் உள்ளே தள்ளி அடைத்து விடுவார்கள்!!
மாலுமிகள் கண்ணாடி வழியே எட்டிப் பார்த்தார்கள்.
ஏதாவது தெரிகிறதா?
ஒன்றுமே தெரியவில்லை.
ஏதோ பெரிய குழாய் போலத் தெரிகிறது...

அவ்வளவு பெரிய குழாய் எதுக்கு?
8 மணி நேரமா உள்ளே கிடக்கிறோம்! எதுவுமே தெரிய வில்லை!
வெளியே யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. இந்தக் கதவைத் திறந்து பார்ப்போம்.
அவர்கள் போய் விட்டார்கள்!
எண்ணெய் முழுக்கக் காலி!
பத்து கோடி ரூபாய் எண்ணெயையுமா கொண்டு போய் விட்டார்கள்?

நம்ப முடியவில்லையே! அவர்களும் மாயமாக மறைந்துவிட்டார்கள்!!
ஒரு சொட்டு எண்ணெய் கூட இல்லையே!
இங்கேயுந்தான்! இந்தத் தொட்டியும் காலி!

கேப்டன்! அவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்? எங்கே போனார்கள்?
கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரு கப்பலையும் காணோம்! ஒரு சொட்டு எண்ணெய் கூடக் கடலில் சிந்தவில்லை!!
கேப்டன்! டிரான்ஸ் மீட்டரை சரி செய்து விட்டேன்!!

என்ன சொல்வேன்... எப்படிச் சொல்வேன்!

உலகம் முழுக்கப் பத்திரிகைகளில் பரபரப்பாகச் செய்தி வந்தது!
நடுக்கடலில் ரூ. 10 கோடி எண்ணெய் கொள்ளை!
கடலில் மர்மக் கொள்ளை!
7 மணி செய்தி
கரையில் இருந்து ஆயிரம் மைல் தொலைவில் நடுக்கடலில் இந்த மர்மக் கொள்ளை நடந்திருக்கிறது...


ஊரெங்கும் இதே பேச்சு!
கொள்ளையர்கள் எங்கேயிருந்து வந்தார்கள்? எப்படி வந்தார்கள்? எங்கே மறைந்தார்கள்? மாலுமிகளுக்கே தெரியவில்லை!
ரூ. 10 கோடி எண்ணெயை அவர்கள் கொண்டு போனது மிகப் பெரிய மர்மமாக இருக்கிறது!

ஓர் ஓட்டலில்
நடுக்கடலில் ரூ. 10 கோடி எண்ணெய் கொள்ளையாம்...
நானும் கேள்விப் பட்டேன்... அந்தப் பெண்ணை சந்திக்க முடியுமா?

காட்டில்—
இந்தக் காலத்திலும் நடுக்கடலில் இப்படிக் கொள்ளை நடக்கிறதா?
அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!

கொள்ளையடிக்கப்பட்ட கப்பல், துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.
கேப்டன்! கப்பல் நிர்வாகிகள் உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்.
நான் எதிர்பார்த்ததுதான்!
கரையில் இருந்து ஆயிரம் மைல் தொலைவில் முக்குளிப்போர் வந்தார்களா? ஆச்சரியமாக இருக்கிறது, கேப்டன்!
ஆனால், அது உண்மை!
ரூ. 10 கோடி எண்ணெய்! எண்ணெய்க் கம்பெனிக்கு என்ன பதில் சொல்லுவது?

நடந்ததை நம்பவே முடியவில்லை! நடுக்கடலில் ரூ. 10 கோடி எண்ணெயை எப்படிக் கடத்திப் போக முடியும்?

ஓட்டலில்—
அந்தப் பெண் வேறு யாருமல்ல... முகமூடியின் காதலி டயானா!
அவர் பெரிய எண்ணெய்க் கம்பெனி அதிபர் பெட்ரோஎன்று பெயர். உங்களைப் பார்க்க விரும்புகிறார்.
எண்ணெய்க் கம்பெனி அதிபரா? அவரிடம் ஒன்று கேட்க வேண்டும்!

டயானா அவரது மேசைக்கு வந்தாள்.
அழகான பெண்களை எனக்கு மிகவும் பிடிக்கும்.
மிகவும் நன்றி.
நான் வந்தது, நடுக்கடலில் எப்படி எண்ணெயைக் கடத்த முடியும்?
நீங்கள் எண்ணெய்க் கப்பல் பார்த் திருக்கிறீர்களா? பார்த்தால்தான் என் பதிலைப் புரிந்துகொள்ள முடியும்!
ஓ...!
காட்டிலிருந்து மாயாவி புறப்பட்டார்!
கடல் கொள்ளைக்காரர்களைப் பற்றி நான் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், நடுக் கடலில் எண்ணெய் கடத்தப்பட்டது ஆச்சரியமாக இருக்கிறது

நகர மனிதர்கள் போல மாயாவி உடை அணிந்து கொண்டார்.
டாண்டா! நான் திரும்பி வரும்வரை குதிரையைப் பார்த்துக்கொள்!
துறைமுகம் பக்கமாக வந்தார்.
இங்கே மாலுமிகள் ஏதாவது பேசிக் கொள்ளுவார்கள். அதில் ஏதாவது செய்தி கிடைக்கும்!
அது யார், புது ஆளாகத் தெரிகிறது!
இரண்டு ரவுடிகள் பார்த்தார்கள்.
முக்குளிப்போர் எண்ணெயைத் திருடிப் போனார்களா? முழுப் பூசணியை சோற்றில் மறைப்பது போல இருக்கிறதே!

பசையுள்ள ஆள் போலத் தெரிகிறது!
நீ நாயைக் கவனித்துக்கொள். நான் ஆளைக் கவனிக்கிறேன்!
இருவரும் பின்தொடர்ந்தார்கள்.
உன் கைவரிசையைக் காட்டு!
இன்னும் கொஞ்சம் போகட்டும்.
கொஞ்சம இருண்ட இடம். மாயாவி மெல்லப் போனார்.
ரவுடிகளை சந்திக்க வேண்டும்! அவர்களுக்கு விஷயம் தெரிந்திருக்க வேண்டும.
லொள்!

மாயாவிமீது ரவுடிகள் பாய்ந்தார்கள். ஆனால், அவர் எச்சரிக்கை யாகவே இருந்தார்!
ஆ.....
அம்மா!
டெவிலும் அவர்கள் மீது பாய்ந்து தாக்கியது.
முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்!
ஒரே அடி! இருவரும் கீழே விழுந்தார்கள்!!
ஏய்! முதலில் என் கையை விடச்சொல்!
எண்ணெய்க் கடத்தல்காரர்கள் எங்கே இருக்கிறார்கள்?
அதோ அந்தப் பக்கம்!
வாயை மூடுடா!

அதேநேரம்— எண்ணெய்க் கப்பலைப் பார்க்க டயானா கிளம்பிக் கொண்டிருந்தாள்.
டயானா எண்ணெய்க் கப்பலைப் பார்க்கப் போகிறாளாம்!
அதைப் பார்த்தால்தான் எண்ணெய்க் கடத்தல் எப்படி நடந்தது என்பது விளக்கமாகத் தெரியுமாம்!
சிறிய படகு ஒன்றுக்கு டயானா வந்தாள்.
நாம் போகலாமா?
போகலாம். ஏறு!
ஒரு கப்பலை நோக்கிச் சென்றார்கள்.
அதுதான் எண்ணெய்க் கப்பலா?
இல்லை. இது எனது சொந்தக் கப்பல்.

இருவரும் கப்பலுக்கு வந்தார்கள்.
உங்கள் கப்பல் ஒரு மாளிகை போல இருக்கிறது!
இங்கே எல்லா வசதியும் இருக்கிறது. 30 மாலுமிகளும், 200 வேலையாட்களும் இருக்கிறார்கள்.
எல்லாம் இருந்தும், சிலநேரம் எனக்கு எதுவுமே இல்லாதது போலிருக்கிறது. தனிமையில் தவிக்கிறேன், டயானா!
தனிமையா? இங்கே 200 பேர் இருக்கிறார்களே!
அந்தப் பெண் அவர் நினைக்கிற மாதிரி தெரியவில்லை!

பெட்ரோ! எனக்குப் பெரிய எண்ணெய்க் கப்பல் காட்டுவதாகச் சொன்னீர்கள்.
பெரிய கப்பல்கள் துறைமுகத்துக்கு வராது. கடலில் நிற்கிறது. நாம் போய்ப் பார்க்கலாம்.
முதலில் உனக்கு விருந்து! இன்றைய இரவை மகிழ்ச்சியுடன் தொடங்குவோம்.
ஆள் பெரிய குள்ளநரியாக இருப்பான் போலிருக்கிறதே!
அதேநேரம் மாயாவி
என்னைக் கடித்துத் தின்றுவிடும் போலிருக்கிறதே! அதைப் பிடி!
அது பத்து நாளா பட்டினி! அது உங்களைக் கடித்துத் தின்னுமுன் உண்மையைச் சொல்லுங்கள்!
எண்ணெய்க் கடத்தல் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது!

மாயாவி அவர்களைப் பிடித்து உலுக்கினார்!
உண்மையைச் சொல்லாவிட்டால், உங்கள் உயிர் பறந்து போய்விடும்!
ஆ... விடு!
நேரா போனால் ஒரு மாடு படம் போட்டிருக்கும். அங்கேதான் சில முக்குளிப்போர்...
முட்டாளே! வாயை மூடு!
எனக்கு இவ்வளவு போதும்!
மாடு படம் போட்ட இடத்துக்கு மாயாவி வந்தார்.
அவன் சொன்னது உண்மையா? போய்ப் பார்ப்போம்!
ஓட்டல் நந்தி
ஓட்டலுக்குள் மாயாவி சென்றார். அங்கே சிலர் குடித்துக் கொண்டிருந்தார்கள்.
நான் முக்குளிப்பவன். எனக்கு வேலை கிடைக்குமா?
யார் இவன்?

கப்பலில்—
உங்கள் கப்பல் ஒரு மாளிகை போல இருக்கிறது!
டயானா! இதையே பத்துமுறை சொல்லிவிட்டாய்! வேறு ஏதாவது பேசேன்!
பேசுகிறேன்—
நான் உடனே வீட்டுக்குப் போக வேண்டும்.
எண்ணெய்க் கப்பல் பார்க்க வேண்டாமா?
வேண்டாம்! நான் வீட்டுக்குப் போக வேண்டும்!
ஓட்டல் நந்தி
யாரோ உன்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள்.
ஆமாம். உங்களைப் பார்த்தால் வேலை கிடைக்கும் என்றார்கள்.
யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு எதுவும் தெரியாது!

இப்படியெல்லாம் கேட்டால் இவர்கள் சொல்ல மாட்டார்கள்!
உன்னை யார் இங்கே அனுப்பியது?
உங்கள் கூட்டாளிகள் சொன்னார்கள்!
எங்களுக்கு கூட்டாளி யாரும் இடையாது!
உ..ண்மையைக் கக்க வைக்க வேண்டியதுதான்!
முகமூடி அவரது வேலையைக் காட்டினார்!.
டேய்!
விடாதே...
பிடி... அடி...
என் பாட்டில்... என் பாட்டில்...
மாயாவி ஒருவனைத் தூக்கி எறிந்தார்!

அவன் வெளியே போய் விழுந்தான்.
அய்யா... ஓசியில் படம் பார்ப்பது போலிருக்கிறது!
ாயாவி தூள் ரத்தினார்!
ஆ...! அய்யோ...
அவர்களை அடித்துப் போட்டுவிட்டு மாயாவி வெளியேபோனார்.
அவன் போய்விட்டான்! என் ஓட்டல் நாசமாப் போய்விட்டதே! அவன் யார் என்று தெரியவில்லையே!

போலீசு அதிகாரியோ? எதுக்கும் தலைவருக்குப் போன் பண்ணிவிடுவது நல்லது!
யாரோ ஒருவன் வந்து முக்குளிக்கும் வேலை இருக்குமா என்று கேட்டான்...
அவனைத் தேடிப்பிடித்து இங்கே கொண்டு வாருங்கள்!
அவனை எங்கே தேடுவது?
வா, நாம் போவோம்!
அவர்கள் எங்கே போகிறார்கள்?
மாயாவி வெளியில் மறைந்து நின்றார்.

கப்பலில்-
என்னைத் தொடாதீர்கள்!
குழந்தைத்தனமாகப் பேசாதே!
உடனே டயானா பெட்ரோவை தூக்கி பந்தாடினாள்
சரி! பெரிய பெண் போல நடந்துகொள்ளு கிறேன்!
பெட்ரோ! என்னை யார் என்று நினைத்தாய்? எலும்பை நொறுக்கிவிடுவேன்!
!

பெரிய வீராங்கனை போலிருக் கிறதே!
ஒவ்வொரு பெண்ணும் இப்படித்தான் இருக்க வேண்டும்.
ஆ... அப்பா... என் கழுத்துப் போச்சு... ஆ... முதுகு எலும்பு முறிந்துவிட்டது...
யாரையாவது கூப்பிட்டு ஒற்றடம் கொடுக்கச் சொல்!
நான் வீட்டுக்குப் போகிறேன்!
என் அனுமதி இல்லாமல் நீ இங்கிருந்து போக முடியாது!
அதையும்

டயானா திடீர் என்று கடலில் குதித்தாள்!
அய்யோ! இந்தக் கடலில் திமிங்கலம் இருக்கிறதே!
திமிங்கலம் அவளை விழுங்கட்டும்!
இல்லை... நான் அழைத்து வந்த பெண்... எனக்கு இல்லாமல் போவதா... அவளை மீட்டுவாருங்கள்...
அதேநேரம்–
டெவில்! நீ இங்கேயே இரு. நான் அவர்களை பின் தொடர்கிறேன்!

32

அந்த ஆள் எங்கே?
அவனைத் தேடிப் போயிருக்கிறார்கள்!
நாங்கள் வேலைக்கு வந்து விட்டோம்!
முட்டாள்களே! அந்த ஆள் உங்களைப் பின்தொடர்ந்து இருந்தால்? சீக்கிரம் உள்ளே போங்கள்!
கப்பலில் இருந்து குதித்த டயானா கரைக்கு நீந்த முயற்சித்தாள். அதற்குள்...

வலையில் சிக்கிக் கொண்டாள்.
கொழுத்த மீன்!
எண்ணெய்க் கப்பலைப் பார்த்துவிட்டுப் போ!
நீர்மூழ்கிக் கப்பலுக்குப் போக வேண்டும். முக்குளிக்கும் உடையை அணிந்து கொள்ளுங்கள் சீக்கிரம்....
ஓ! இவர்கள்தான் கடல் கொள்ளைக் காரர்களோ?
மீண்டும் எண்ணெய்க் கப்பலா? அல்லது...
தெரிய வில்லை.

நானும் வருகிறேன்!
மாயாவி பாய்ந்தார்!
நீ...யா...
எல்லாரும் தயார். சீக்கிரம் வா.
எங்கே?
மாயாவி மின்னல் வேகத்தில் செயல்பட்டார்
நீர்மூழ்கி கப்பல்! எங்கே இருக்கிறது?

இரவில்...
உம்...சீக்கிரம் நிறைய வேலை இருக்கிறது!
கொள்ளையர்கள் நீர்மூழ்கிக்கப்பலுக்கு வந்தார்கள்.
நல்ல வேட்டையுடன் திரும்புங்கள்!
நீர்மூழ்கிக் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீருக்குள் அமிழ்ந்தது.
எனக்கும் நிறைய வேலை இருக்கிறது!
அதேபோன்ற இன்னோர் எண்ணெய்க் கப்பல். இதுவும் மிகப்பெரிய கப்பல்.

நீர்மூழ்கிக் கப்பல் இரண்டு நாள் பயணம் செய்தது.
இந்தக் கப்பலிலும் பத்துக் கோடி ரூபாய்க்கு எண்ணெய் இருக்கிறதாம்!
நாம் அந்தக் கப்பலை நெருங்க இன்னும் இரண்டு நாள் ஆகும்.
இந்த வேலையையும் சுத்தமாக முடிக்க வேண்டும். தலைவர் உங்களுக்குப் பெரிய பரிசு கொடுப்பார்!

பெரிய தொகை கிடைத்தால், அதோடு இந்தத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிடுவேன்!
நான் ஒரு பெட்ரோல் பங்கு வைப்பேன்!

முக்குளிப்போர் இடையே மாயாவியும் இருந்தார்!
இவர்களின் தலைவன் யார்? பத்து கோடி ரூபாய் பெட்ரோலை எப்படி கப்பலில் இருந்து இருடுவார்கள்?

கப்பலில்
டயானாவை என்ன செய்தீர்கள்?
அவளை நம்மோடு அழைத்துப் போவது நல்லது அல்ல!
அவளை வெளியே விடுவதும் ஆபத்து! அவள் என்னோடு இருக்கட்டும். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
இவர்கள் எங்கே போகிறார்கள்? என்னை வெளியே விடுவது ஆபத்து என்று ஏன் நினைக்கிறார்கள்?
புதிய கப்பல் நடுக்கடலில் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது.
எண்ணெய் கடத்தல் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?
இன்னும் அந்த மர்மம் புலப்பட வில்லையாம்!

பெட்ரோவின் கப்பலை நோக்கி, நீர்மூழ்கிக் கப்பல் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது!
சரியான நேரத்தில் போய்ச் சேர்ந்துவிடுவோம்!
கப்பலில்:
பெட்ரோ! அது நீர்மூழ்கிக் கப்பல் போலத் தெரிகிறதே?
நீ எண்ணெய் கப்பல்தானே பார்க்க வேண்டும்!
சிறிது நேரம் கழித்து பெட்ரோ ஒரு முகமூடியை அணிந்து கொண்டான்!
இப்பொழுது உங்களை யாருக்கும் அடையாளம் தெரியாது!
என்னைப் பெற்ற அம்மாவுக்குக்கூட இப்பொழுது என்னை அடையாளம் தெரியாது!
எல்லாரும் நீர்மூழ்கிக்கப்பலுக்கு வந்தார்கள். டயானாவுக்கு ஒரே வியப்பு!
மூக்குளிப்போர்! இவர்களுக்கு இங்கே என்ன வேலை?
அட, பொம்பளை!
நீ பொம்பளையை பார்த்தது இல்லையா!


டயானாவை மாயாவி பார்த்துவிட்டார்! அவருக்கு ஒரே ஆச்சரியம்!
டயானா... அவள் எப்படி இங்கே?
அதோ, எண்ணெய்க் கப்பல் வந்துவிட்டது! தயாராகுங்கள்!
டயானாவைத் தனியே விட்டுவிட்டுப் போவதா?
ஏய்! அங்கே என்ன பார்வை? அவள் தலைவரின் ஆள்!
மூக்குளிப்போர் எண்ணெய்க் கப்பலுக்கு வந்தார்கள்!

40


இவர்கள் எங்கே இருந்து வந்தார்கள்?
யார் நீங்கள்? உங் களுக்கு என்ன வேண்டும்

ர்மூழ்கிக் கப்பலில் இருந்து ண்ணாடி வழியே கேப்டன் ார்த்துக்கொண்டிருந்தார்.
கேப்டன்! கொஞ்சம் விலகு! இவள் பார்க்கட்டும். இவள் எண்ணெய்க் கப்பல் பார்த்தது இல்லையாம்


நாம் நடுக்கடலில் இருக்கிறோம்! இவர்கள் எப்படி இங்கே வந்திருக்க முடியும்!

எல்லாரும் ஓர் அறைக்குள் தள்ளப்பட்டார்கள்!
அவர்கள் பேச மாட்டார்களா?
அவர்களின் துப்பாக்கிதான் பேசும் போலி
பத்துக் கோடி ரூபாய் எண்ணெயை எப்படித் திருடுவார்கள்?
குழாய் வழியே... எண்ணெயை கொண்டு போகிறார்கள்?
இடம் சரியாக இருக்கிறதா. பார்.
டயானா கண்ணாடி வழியே பார்த்தாள்!
டயானா, பார்த்தாயா? அதுதான் எண்ணெய்க் கப்பல். எவ்வளவு பெரிதாக இருக்கிறது, பார்!

இந்த எண்ணெய் எங்கே போகிறது என்று பார்க்க வேண்டும்!
கடலுக்கு அடியில் நீர்மூழ்கிக் கப்பலுடன் சேர்த்து, நீண்ட நீண்ட பிளாஸ்டிக் பைகள் கட்டப்பட்டிருந்தன!
மாலுமிகள் ஓர் அறைக்குள் அடைக்கப்பட்டிருந்தார்கள்.
வெளியே என்ன நடக்கிறது என்றே தெரிய வில்லையே!
இந்த தொட்டி காலி! அடுத்த தொட்டிக்கு வாருங்கள்!


எப்படி எண்ணெய் கடத்துகிறார்கள் என்பதை
மாயாவி தெரிந்துகொண்டுவிட்டார்!
கப்பலில் இருந்து பெரிய குழாய்கள் வழியே எண்ணெய்
பெரிய பெரிய பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றப்பட்டது.
அந்தப் பைகள் நீர்மூழ்கிக் கப்பலுடன் இணைக்கப்
பட்டிருந்தன.
ஒவ்வொரு பையாக நிரப்பிக்
கொண்டு வந்தார்கள்.
முகமூடி
இப்படித்தான்
எண்ணெயைக்
கொள்ளையடிக்
கிறார்களா!

டயானாவும் வந்தாளே! அவளுக்கு இதில் என்ன பங்கு?
திருடுவதுதான் உங்கள் தொழிலா?
அல்ல! கடத்தல்!!
இந்தக் கொள்ளைக் கூட்டத்துக்கு நீதான் தலைவனா?
இப்பொழுதாவது என்னைப் புரிந்து கொண்டாயா!
ஆனால், இதை வெளியில் சொல்ல, நீ உயிருடன் இருக்க மாட்டாய்!

45


எண்ணெய் முழுவதும் கடத்தப்பட்டது!
ரேடியோ அறையை யாராவது கவனித்தீர்களா?
தெரியவில்லை! நான் போய்ப் பார்க்கிறேன்!
ரேடியோ அறையை நொறுக்கிவிடு!
ஓ.கே.!
பைகள் நிறைந்துவிட்டன! நீர்மூழ்கிக் கப்பல் கிளம்ப வேண்டியதுதான்!

டயானா பயந்துவிட்டாள்!
பெட்ரோ! என்னைக் கொல்லப் போகிறாயா?
வேறு என்ன செய்வது? என் இரகசியமெல்லாம் உனக்குத் தெரிந்துவிட்டதே!
டயானா நைசாக கேமராவை எடுத்தாள்!
கிளிக்!
கிளிக்!
உன் ஆசைதீர படம் எடுத்துக்கொள்!
நாம்தானே பிரிண்ட் போடப் போகிறோம்.
இவர்களையும் சேர்த்து எடு! எனக்கு ஒரு படம் கொடுப்பாயா?
ரேடியோ அறைக்கு முகமூடி வந்தார். ரேடியோவுக்கு சேதம் இல்லாமல், அறையைத் தாக்கினார்.
வேலை முடிந்தது!

ரேடியோ அறை தூள் தூள்!
சரி, வாருங்கள்!

எண்ணெய்க் கப்பலில் அடைபட்ட மாலுமிகள்
வெளியில் ஒரு சத்தமும் இல்லையே!


முக்குளிப்போர் எண்ணெய்க் கப்பலில் இருந்து நீர்மூழ்கிக் கப்பலுக்கு விரைந்தார்கள்!

அப்பொழுது— டயானா மாயாவியைக் கூட படம் பிடித்தாள்.



நீர்மூழ்கிக் கப்பல் கிளம்பியது.
பெட்ரோ! அந்தப் பெண்ணிடம் கேமராவை வாங்கினீர்களா?
அப்பொழுதே வாங்கி விட்டேன்!
கடலில் குதிக்க டயானா முயற்சித்தாள்!
என்னை விடு!
உன்னை உயிரோடு விடமுடியாது!
மாலை போலக் கோர்க்கப்பட்ட எண்ணெய்ப் பைகளை நீர்மூழ்கிக் கப்பல் இழுத்துச் சென்றது!

எண்ணெய்க் கப்பல் மாலுமிகள் அறையை உடைத்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.
எங்கே அந்த கொள்ளைக் காரர்களை?
ஒருவரையும் காணோம்!
அய்யோ! ஒரு சொட்டு எண்ணெய்கூட இல்லை
கப்பலில்
டயானா! உன் ஆசைதீரப் படம் எடுத்துக்கொள்!!
வேலை முடிந்து விட்டதே.. எல்லாவற்றையும் கழற்றி விடலாமா?
அப்பொழுது அறைக்குள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்டது.
தலைவரே! இவளை எப்படித் தீர்த்துக்கட்டுவது? என்ஜின் பல்சக்கரத்தில் கட்டி விடுவோமா?

ரேடியோ அறையில் செய்தி அனுப்பப்பட்டது!
கப்பல் கொள்ளைக்காரர்கள் எண்ணெய் முழுவதையும் கொண்டுபோய் விட்டார்கள்!
கடல் கொள்ளைக்காரர்கள் எண்ணெய் முழுக்கக் கொண்டு போய்விட்டார்கள்.
நீர்மூழ்கிக் கப்பலில் உள்ள ரேடியோ அறையில் அந்தச் செய்தி கேட்டது.
ஆபத்து! கேப்டன்... கேப்டன்...
எண்ணெய்க் கப்பலில்
முக்குளிப்போர் எண்ணெய்யை விழுங்கி யிருப்பார்களோ!
உளறாதே:

கேப்டனிடம் சொல்... எண்ணெய்க் கப்பலில் இருந்து ரேடியோ அறிவிப்பு...
ஒரு ரேடியோ செய்தி... கேப்டன்! எண்ணெய்க் கப்பலில் இருந்து
இவளைக் கொண்டுபோய் என்ஜின் பல்சக்கரத்தில் கட்டிப் போடு!
ரேடியோவை உடைத்துத் தூளாக்கி விட்டோமே! எப்படி இருக்கும்?
எங்கோ தவறு நடந்திருக்கிறது! இவளைப் பார்த்துக்கொள். நான் விசாரித்து விட்டு வருகிறேன்!
எண்ணெய்க் கப்பலில் ரேடியோவைத் தாக்கி உடைத்தது யார்?
நான் இல்லை
நான் இல்லை
நான் இல்லை.
நான்தான் கேப்டன்! அப்படியே அசையாமல் நில்!!

நீயுந்தான் பெட்ரோ! அசைந்தால் உன் உயிருக்கு ஆபத்து!
மாயாவியின் குரல் போலிருக்கிறதே!
அன்பே! ஆச்சரியமாக இருக்கிறது! எதிர்பாராத சந்திப்பு!! இங்கே எப்படி வந்தீர்கள்?
பிறகு சொல்லுகிறேன். முதலில் இவர்களின் கணக்கைத் தீர்க்க வேண்டும்!
யார் நீ? இங்கே எப்படி வந்தாய்?
முதலில் எல்லாரும் கையை உயர்த்துங்கள்!
அப்படி ஓரமாகப் போய் நில்லுங்கள்!

நீ இரகசியப் போலீஸ் அதிகாரியா?
இல்லை!
உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்! நாங்கள் ஐம்பது பேர், துப்பாக்கியுடன் இங்கே இருக்கிறோம்.
முட்டாளே! நீயும் செத்துப் போவாய்!
நான் ஒரு குண்டு வெடித்தால் போதும்! எண்ணெய் தீப்பற்றிக் கொள்ளும்! நீர்மூழ்கிக் கப்பலும் வெடித்துச் சிதறும்!
இவர்களை சுட்டுத் தள்ள வேண்டும்!
வேண்டாம்!
நானே சுடுகிறேன்! இது அவர்களை எச்சரிக்கத்தான்!
உனக்கு என்ன வேண்டும்? கேள், தருகிறேன்!

உனக்கு ஒரு கோடி வேண்டுமா? இரண்டு கோடி வேண்டுமா?
சொல்லுகிறேன்... எண்ணெய்க் கப்பல் நிற்கிறதா என்று பார்!

ஒரு மைல் தூரத்தில் நிற்கிறதே!
கேப்டன்! நீர்மூழ்கிக் கப்பலை அங்கே திருப்பு! ஏதாவது ஏடாகூடம் செய்தால், தொலைந்தாய்!

நீர்மூழ்கிக் கப்பல் எண்ணெய்
கப்பலை நோக்கி வந்தது.
அதோ பார்! இது குண்டு துளைக்காத கண்ணாடி! அவன் ஒன்றும் செய்ய முடியாது!!
எண்ணெய்க் கப்பல் மாலுமிகள் வியப்புடன் பார்த்தார்கள்.
நீர்மூழ்கிக் கப்பல்.. பைகளில் எண்ணெய். ஏன் தண்ணீருக்கு மேலே வந்திருக்கிறார்கள்?
ஏதாவது



எண்ணெய்க் கப்பலின் ரேடியோ செய்தி கேட்டு, விமானமும் ஒரு கப்பலும் உதவிக்கு விரைந்து வந்தன:

உதவிக்கு போலீசார் வந்தார்கள்!
ஒரு அதிரடிப் பெண் உங்கள் எல்லாரையும் மடக்கி விட்டாளா!
உலகம் முழுக்க செய்தி பரபரப்பாகப் பரவியது!
கொள்ளைக் காரர்களை ஒரு பெண் பிடித்துக் கொடுத்தாள்!
செய்தி
அதிரடிப்பெண் டயானாவின் வீரச்செயல்
கடல் கொள்ளைக்காரர்கள் பிடிபட்டார்கள்!

டயானா! நீ எடுத்த இந்தப் படங்கள் நீதிமன்றத்தில் நல்ல சாட்சியமாக இருக்கும்!
ஆனால், கொள்ளைக்காரர்களைப் பிடித்தது நீங்கள்தான்— எல்லாப் புகழும் உங்களுக்கே!
அதில் உன் பங்கும் உண்டே!
மாயாவியின் வீரச் செயல் பற்றி ஏழு கடலிலும் பேசிக்கொண்டார்கள்!
மாயாவி இருக்கும்வரை நமக்குப் பயமே இல்லை!
(முடிந்தது)
© King Features Syndicate, Inc., 1968, World rights reserved

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

அமுதத்
காமிக்ஸ்

Regd. No. TN/MS (N)
Registered as Newspaper in Sr.

அலற வைக்கும்
அதிரடிக் கதை!

மர்மத் தீ

திடீர் என்று பண்ணை தீப்பிடித்து எரிகிறது. நெருப்பு வைத்தது யார்
ஆகஸ்டு 1-ந்தேதி "ராணி காமிக்ஸ்" வாங்கிப் படியுங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007